செ.வெ.எண்.21 நாள்.16.04.2020

# பொதுமக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்

கொரோனா வைரஸ் நோய் தொற்று உலகமெங்கிலும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் இந்நோய் தொற்றினை தற்போது உலகளாவிய தொற்று நோயாக (Pandemic) அறிவித்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்களது மாவட்டங்களில் கொரோனா பரவலை தடுத்திட தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பேரிடர் மேலாண்மை சட்டம், 2005 மற்றும் கொள்ளை நோய்கள் சட்டம்,1897 இன் கீழ் மேற்கொள்ள கட்டளையிட்டுள்ளார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியில் செல்லும்போது கண்டிப்பாக முகக்கவசம் (Mask) அணிய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் கடைகளில் விற்கப்படும் முகக்கவசங்கள் அல்லது தாங்களாகவே வீட்டில் பருத்தியிலான துணியில் தயாரித்த சாதாரண முகக்கவசத்தை பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்டுகிறது. மேலும், கொரோனா பரவுவதை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள் அத்தியாவசிய தேவைக்காக வெளியில் செல்லும்போது தற்பாதுகாப்பு மற்றும் பொதுசுகாதாரத்திற்காக கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். அரசு அறிவுறுத்தலை மீறும் பட்சத்தில் ரூ.500/- அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நமது மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளிலிருந்து வெளிமாநிலத்திற்கு சென்று வந்தவர்கள், வெளிநாடுகளுக்கு சென்று வந்தவர்கள் இத்தகவலை இதுவரை தெரிவிக்காதவர்கள் எவரேனும் இருந்தால் தாங்களாகவே முன்வந்து 24 மணிநேரமும் இயங்கக்கூடிய மருத்துவ உதவி எண் **104-ஐ** தொடர்பு கொண்டு தெரிவித்திட வேண்டும் மற்றும் அவசர கட்டுப்பாட்டு அறை எண்களான **1077** மற்றும் **04146-223265** என்ற எண்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிப்பதன் மூலம் தனிநபருக்கும் மற்றும் சமூகத்திற்கும் கொரேனா நோய் பரவாமல் தடுப்பதற்கு பேரூதவியாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், வீடுகளில் உள்ள பொதுமக்கள் தங்களுக்கு சளி, இருமல் மற்றும் காய்ச்சல் இருந்தாலும் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் மேலே கூறப்பட்ட நடைமுறைகளை கடைபிடித்து கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு துணை புரிந்திடவும், ஒத்துழைப்பு நல்கிடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்